<u>சுருக்கம்</u>

அறிவிப்பு 2019–2020 – வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை திட்டம் – வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை பெற கையாளப்படும் நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் – ஆண்டு உச்ச வருமானம் ரூ.50,000/–லிருந்து ரூ.72,000/–ஆக உயர்த்துவது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்2 ) துறை</u>

அரசாணை (நிலை) எண்.127

நாள் 25.07.2019
விகாரி – ஆடி 9
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.172, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள்: 16.11.2009.
2. ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் கடித எண்:வே.உ.1/6836/2018, நாள்: 10.09.2018, 22.10.2018 மற்றும் 11.02.2019.

------

<u>ஆணை:</u>

10.07.2019 அன்று சட்டப்பேரவையில் நடைபெற்ற 2019–2020–ம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கீழ்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> "வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உயிர் பதிவேட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் காத்திருக்கும் வேலைநாடுநர்களுக்கு வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை, மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. பிப்ரவரி 2017 முதல் வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை இருமடங்காக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில் தற்போதுள்ள ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.50,000/–லிருந்து ரூ.72,000/–ஆக உயர்த்தப்படும்."

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் அவர்கள் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் வருமான வரம்பினை ரூ.50,000/–லிருந்து ரூ.72,000/-ஆக உயர்த்துவதன் மூலம் ஏற்படும் உத்தேச கூடுதல் செலவினத்தை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

| கூடுதலாக எதிர்நோக்கப்படும் பயனாளிகள் மற்றும் கல்வித்தகுதி | உதவித் தொகை விவரம் | மாதங்கள் | கூடுதல் செலவின விவரம் |
|---|---|---|---|
| 375 (பத்தாம் வகுப்பு தோல்வி) | ரூ.200/– | 12 | ரூ.9,00,000/– |
| 1300 (பத்தாம் வகுப்பு தேர்ச்சி) | ரூ.300/– | 12 | ரூ.46,80,000/– |
| 1500 (மேல்நிலை கல்வித்தகுதி) | ரூ.400/– | 12 | ரூ.72,00,000/– |
| 750 (பட்டதாரி கல்வித்தகுதி) | ரூ.600/– | 12 | ரூ.54,00,000/– |
| மொத்தம் = 3,925 | | 12 | ரூ.1,81,80,000/– |

வருமான வரம்பினை உயர்த்துவதன் மூலம் ஏற்படும் உத்தேச கூடுதல் செலவினம் ரூ.1,81,80,000/– கூடுதல் பயனாளிகள் – 3,925.

3. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில், ஆண்டு வருமான உச்ச வரம்பினை ரூ.50,000/–லிருந்து ரூ.72,000/–ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது. இந்த நடைமுறை, ஆணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து, வருமான உச்சவரம்பினால் இணையும் பயனாளிகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

4. மேலே பத்தி 2 மற்றும் 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், கீழ்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| | தொகை (ரூபாயில்) |
|---|---|
| "2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் – 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் மாநிலச் செலவினங்கள் – JD – சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் வேலை இல்லாத இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்குதல் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை." (ததொகு.2235–60–789–JD–30903) | ரூ.54,54,000/- |
| "2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் மாநிலச் செலவினங்கள் – JD – பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் வேலை இல்லாத இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்குதல் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை." (ததொகு.2235–60–796–JD–30903) | ரூ.1,09,000/- |

“2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் – 800 ஏனைய செலவு மாநிலச் செலவினங்கள் – AX வேலை இல்லாத இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்குதல் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.” ரூ.1,26,17,000/-

(ததொகு.2235–60–800–AX–30903)

மொத்தம் ரூ.1,81,80,000/-

5. மேலே பத்தி 2 மற்றும் 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் (ரூ.1,81,80,000/–), 2019–2020ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் (இனம் எண் 16,17 மற்றும் 18) சேர்க்கப்பட்டுள்ளது. இதனை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகின்றது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு எண்.33101/L&E/2019, நாள் 25.07.2019 -ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல் பாலீவால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, கிண்டி, சென்னை–32.
மாநிலக் கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை / தணிக்கை) சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–05.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
} ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்கள் வழியாக

நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை– 09.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 09.
மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 09.
அனைத்து துறைச் செயலாளர்கள், சென்னை– 09.
✓முதன்மைச் செயலரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–09.
நிதி (தொ (ம ) வே. வா/வ.செ.1) துறை, சென்னை –09.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு–2) துறை, சென்னை–09.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, (எப்) பிரிவு, சென்னை–09.
இ.கோ/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

26.7.19